செ.வெ.எண்: 88 நாள்: 01.02.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 120 புதிய பேருந்துகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.**

**புதிய சொகுசு பேருந்துகளை துவக்கி வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் புதிய சொகுசு பேருந்துகளை இன்று (01.02.2020) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து, பணியாளர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பெ.வே.சரவணன் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

பொதுமக்கள் மற்றும் பயணிகள் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ளவும், மேலும் பேருந்து பயணத்தின் போது சொகுசாக சிரமமின்றி பயணிக்கவும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் புதிய சொகுசு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு புதிய அதிநவீன பேருந்து வசதிகள், கூடுதல் பேருந்து வசதிகள் போன்றவை தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்றையதினம் புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் 4 புதிய சொகுசு பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்துகள் திருச்சியில் இருந்து விராலிமலை வழியாக மதுரைக்கும், பெருமகளூர் முதல் திருச்சிக்கும், திருச்சியில் இருந்து புதுக்கோட்டை வழியாக இராமேஸ்வரத்திற்கும், அறந்தாங்கி முதல் திருச்சிக்கும் என 4 வழித்தடங்களில் இப்புதிய பேருந்துகள்

இயக்கப்பட உள்ளது. மேலும் ஒரு நபருக்கு கருணை அடிப்படையில் ஓட்டுநர் பணிக்கான ஆணையும், 4 நபர்களுக்கு சேம ஓட்டுநர் நிலையிலிருந்து தினக்கூலி ஓட்டுநர் பணிக்கான ஆணைகளும், ஒரு நபருக்கு சேம நடத்துனர் நிலையிலிருந்து தினக்கூலி நடத்துனர் பணிக்கான ஆணையும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் 120 புதிய பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. எனவே பயணிகள் இப்பேருந்து வசதியினை உரிய முறையில் பயன்படுத்தி பாதுகாப்பான மற்றும் சொகுசான பயணத்தினை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக புதுக்கோட்டை மண்டல பொது மேலாளர் இளங்கோவன், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நெடுஞ்செழியன், மத்திய தொலைதொடர்பு ஆலோசனை குழு உறுப்பினர் பாஸ்கர், கூட்டுறவு அச்சக சங்கத்தலைவர் சேட் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**